**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – ஈரோடு கோட்டம் – திரு மு.அசோக்குமார் என்பவர் கருணையடிப்படையில் 20.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

அரசாணை (டி) எண்.177

நாள்: 12.08.2022
சுபகிருது, ஆடி–27,
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. இணை ஆணையரின் (மா.வ), ஈரோடு கோட்டம், ஈரோடு செயல்முறைகள் ந.க.எண்.9179/2019/ அ2, நாள் 04.08.2020.
4. துணை ஆணையரின் (மா.வ), திருப்பூர்–1 செயல்முறைகள் ந.க.எண்.2479/2020/ அ1, நாள் 06.08.2020.
5. இணை ஆணையரின் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம் கடித எண். ஒ்–3/1768947/2021, நாள் 08.03.2022.

*****

**ஆணை:**

வணிகவரித் துறையின் ஈரோடு வணிகவரி கோட்டம், துறை பிரதிநிதி/உதவி ஆணையர் (மா.வ), ஈரோடு அலுவலகத்தில் உதவி ஆணையராகப் பணிபுரிந்தபோது 07.01.2019 அன்று மறைந்த திரு நா.முருகேசன் என்பவரின் மனைவி திருமதி. மு.கிருஷ்ணவேணி என்பவர் தனது மகன் திரு மு.அசோக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 26.05.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும் திரு மு. அசோக்குமார் என்பவரின் பிறந்த தேதி 15.03.1991, அரசு ஊழியர் காலமானபோது தனியரின் வயது 27 ஆண்டுகள் ஆகும் என்றும் இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது மற்றும் அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை

என்பதால், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி அளித்த விண்ணப்பத்தின் மீது விசாரணை மேற்கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, மேலே மூன்றில் படிக்கப்பட்ட இணை ஆணையர் (மா.வ), ஈரோடு கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையில் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு திருப்பூர்-I துணை ஆணையர் (மா.வ) அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே நான்கில் படிக்கப்பட்ட துணை ஆணையர் (மா.வ), திருப்பூர்-1 அவர்களின் செயல்முறை ஆணையின்படி திரு. மு.அசோக்குமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டார். அதன்படி தனியர் ஈரோடு கோட்டம், துணை ஆணையர் (மா.வ), திருப்பூர்-1 அலுவலகத்தில் 20.08.2020 முற்பகல் அன்று பணியேற்பு செய்துள்ளார். தனியரின் தற்காலிக பணி நியமனத்தை அவர் பணியில் சேர்ந்த நாளான 20.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு இணை ஆணையர் (நிர்வாகம்), (வணிகவரி ஆணையர் அலுவலகம்) மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் இணை ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு. மு.அசோக்குமார், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. எனவே, வணிகவரித் துறையில், ஈரோடு வணிகவரி கோட்டம், உதவி ஆணையர் (மா.வ) ஈரோடு அலுவலகத்தில் உதவி ஆணையராகப் பணிபுரிந்தபோது 07.01.2019 அன்று மறைந்த திரு நா.முருகேசன் என்பவரது மகன் திரு. மு.அசோக்குமார் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், துணை ஆணையர் (மா.வ), திருப்பூர்-1 அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 20.08.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரின் பணியானது வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்

படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.8865/ட்டி-1/2022, நாள் 17.05.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.2457638/ஜி.1/2022, நாள் 27.05.2022 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:

திரு மு.அசோக்குமார், இளநிலை உதவியாளர்,
துணை ஆணையர் (மா.வ), திருப்பூர்-1 அலுவலகம்,
ஈரோடு கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர்,
சென்னை-5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர்,
சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர்,
சென்னை-5 வழியாக)

நகல்:

இணை ஆணையர் (மாநிலவரி), ஈரோடு கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர்,
சென்னை-5 வழியாக).
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை - 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(மா. இராமகிருஷ்ணன்)
அரசுச் சார்புச்செயலாளர்